**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

STC.No.268/2024

Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : ஐந்துகாயம் | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

21.04.2026

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் கிராமபுறத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். பொதுவாக கிராமங்களில் ஒரு வீட்டை 25 லட்சம் அல்லது 30 லட்சம் ரூபாய்க்கு கட்டுவார்கள் என்றால் சரியல்ல. கிராம புறங்களில் ரூபாய் ஒரு கோடி வரையில் கூட வீடு கட்டுவார்கள். ஆஜர் எதிரியானவர் என்னிடமிருந்து ரூ.45,00,000/– கடனாக பெற்றுள்ளதாக கூறி நான் இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த தொகையை ஒரே தேதியில் ஒரே தவணையாக எதிரிக்கு கொடுத்தாக நான் புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2) நான் அளித்த ரூ.45,00,000/–த்தில் அனைத்துமே 500 ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தேன். மொத்தம் 90 கட்டுக்கள் எதிரிக்கு கொடுத்தேன். அவைகள் புதிய நோட்டுக்களாக அல்லது பழைய நோட்டுக்களா என்றால் புதிய நோட்டுக்கள் தான் அவைகளை வங்கியிலிருந்து நீண்ட காலமாக எடுத்து எடுத்து வீட்டில் சேமித்து வைத்திருந்ததை எதிரிக்கு கொடுத்தேன். நான் ஓய்வு பெற்று சிறப்பு சார்பு ஆய்வாளர் என்றால் சரிதான். 28.02.2010ம் தேதி நான் பணி ஓய்வு பெற்றேன். எனக்கு 3 பெண்மக்கள் என்றால் சரிதான். நான் காவல்துறையில் பணியாற்றியதால் எனக்கு சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு உள்ளது என்றால் சரிதான்.

3) ஆஜர் எதிரியானவர் ஓய்வு பெற்ற இராணுவ வீரர் என்றாலும், அவர் எனக்கு மருமகன் உறவுமுறை என்றாலும் சரிதான். 12.06.2024 ம் தேதி நீதிமன்றத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு அது சரியாக நினைவில் இல்லை. வழக்கு காசோலையானது 10.02.2024 ம் தேதியிடப்பட்டது. 16.04.2024 ம் தேதி மேற்படி காசோலையை நான் வசூலுக்கு தாக்கல் செய்தேன். நான் வங்கியில்மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தற்கு உண்டான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை ஆனால் போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டதற்கான குறிப்பாணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 03.05.2024 ம் தேதியிட்ட சட்ட அறிவிப்பை எதிரிக்கு 04.05.2024 ம் தேதி அனுப்பி வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

4) அந்த சட்ட அறிவிப்பை எதிரியானவர் 13.05.2024 ம் தேதி பெற்றுக்கொண்டுள்ளார் என்றால் சரிதான். ஆனால் நான் புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் எதிரியானவர் 21.05.2024 ம் தேதி மேற்படி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு அது சரியாக நினைவில் இல்லை. காசோலையை காசோலை தேதியிலிருந்து 3 மாதத்திற்குள் வசூலுக்கு தாக்கல் செய்யவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான், அதன்படி தான் தாக்கல் செய்துள்ளேன். நான் நிரூபண வாக்குமூலத்தில் காசோலை தேதியை 10.04.2024 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் எதிரியானவர் 10.02.2024 ம் தேதி எனக்கு 10.04.2024 ம் தேதியிட்டு காசோலை கொடுத்ததாக கூறியுள்ளேன். நான் ஏற்கெனவே 10.02.2024 ம் தேதியிட்ட காசோலை என்று கூறிவிட்டு தற்போது 10.04.2024 ம் தேதி என்று முன்னுக்கு பின் முரணாக மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. 10.02.2024 ம் தேதி காசோலை கொடுக்கப்பட்டது என்று தான் கூறினேன்.

5) 16.04.2024 ம் தேதி காசோலை திருப்பப்பட்டது என்றால் சரிதான். நான் எதிரிக்கு 04.05.2024 ம் தேதி 19 நாட்கள் கழித்து சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி எனக்கு 27.05.2024 ம் தேதி பதில்

சட்ட அறிவிப்பு அனுப்பி வைத்துள்ளார் என்றால் எதிரி சட்ட அறிவிப்பு அனுப்பினார் ஆனால் எந்த தேதி என்று எனக்கு நினைவில் இல்லை. எதிரி எனக்கு சட்ட அறிவிப்பை அனுப்பியதை நான் புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேன் ஆனால் தேதியை தான் குறிப்பிடவில்லை. நான் வங்கியிலிருந்து காசோலை திருப்பப்பட்ட தேதிக்கு பின்னதாக 65 நாட்கள் கழித்து தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு காலம் சரியாக தெரியவில்லை. ஆனால் உரிய சட்ட காலத்திற்குள் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

6) எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பில் 16.04.2024ம் தேதியிட்ட காசோலை ரூ.45,00,000/-த்திற்குண்டான கடனை தீர்க்க வேண்டியது சட்டப்படியான கடமை என்று கூறியுள்ளேன் என்றால் அப்படித்தான் உள்ளது ஆனால் காசோலை தேதியானது தவறுதலாக சட்ட அறிவிப்பில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. இந்த தட்டச்சு பிழை ஏற்பட்டது சம்மந்தமாக திருத்த அறிவிப்பை எதிரிக்கு அனுப்பி உள்ளேனா என்றால் இல்லை. நான் தற்போது மாதந்தோறும் பணி ஓய்வு ஊதியமாக ரூ.34,524/- பெற்று வருகிறேன். நான் பணி ஓய்வு பெற்றபோது நலத்தொகையாக மொத்தம் ரூபாய் 20 லட்சம் வரையில் பெற்றேன். நான் எனது இருபெண்மக்களுக்கு திருமணம் முடித்து வைத்துவிட்டேன். ஒரு பெண்ணிற்கு திருமணம் செய்யவே ரூபாய் 15 லட்சம் வரையில் செலவு ஆகும் என்றால் சரிதான்.

7) நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிராது மனுவில் எனக்கு ஓய்வு பெற்றதன் மூலம் கிடைத்த பணம், விவசாயத்தின் மூலம் ஈட்டிய பணம், Neomax எனும் நிறுவனத்தில் முதலீடு செய்து அதன் மூலம் கிடைத்த பணம் ஆகியவைகளை எதிரிக்கு கடனாக கொடுத்ததாக கூறியுள்ளேன். நான் விவசாய நிலத்தில் விவசாயம் செய்வதற்குண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. Neomax நிறுவனத்தின் மூலம் பணம் கிடைத்ததாக சொல்லப்படுகிற நிலையில் அதற்குண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். Neomax

நிறுவனத்தில் மோசடி நடைபெற்று அரசால் மேற்படி நிறுவனம் 4 வருடங்களுக்கு முன்னதாக மூடப்பட்டுவிட்டது என்றால் நிறுவனம் மூடியது உண்மை தான் ஆனால் எனக்கு கிடைக்கவேண்டிய பணம் கிடைத்துவிட்டது. நான் 10 வருடங்களுக்கு முன்பே ரூபாய் 20 லட்சம் பெற்றுவிட்டேன். அதற்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8) ஒரு தனிநபர் கையிருப்பு தொகையாக ரூ.50,000/- வரையில் மட்டுமே வீட்டில் வைத்திருக்கலாம் என்றால் சரியல்ல, எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். நான் பணியில் இருந்தபோது வருமான வரி செலுத்தினேன். நான் வருமான வரி செலுத்தியதற்குண்டான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு என்னுடைய வீட்டில் வைத்து பணம் கடனாக கொடுத்தேன். யார் முன்னிலையில் எதிரிக்கு ரொக்கமாக ரூபாய் 45 லட்சம் கொடுத்தேன் என்ற விபரத்தை பிராது மனுவில் கூறியுள்ளேனா என்றால் எனக்கு அது தற்போது நினைவில் இல்லை ஆனால் என்னுடைய மனைவி, வீரம்பல் கிராமத்தை சேர்ந்த டேவிட்பாலு மற்றும் மேலச்சிறுபோது கிராமத்தை சேர்ந்த சித்திரைவேலு ஆகியோர் முன்னிலையில் கொடுத்தேன்.

9) நான் மேற்படி நபர்கள் சாட்சிகளாக முன்னிலைப்படுத்த தயாராக உள்ளேன். நான் எதிரிக்கு பணம் எதுவும் கடனாக கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு கொடுத்திருந்தால் நான் விபரங்களை சரியாக கூறியிருப்பேன் என்றாலும், நான் பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தான் முன்னுக்கு பின் முரணாக மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2015 அல்லது 2016 ஆண்டியிலிருந்து Sky என்ற நிறுவனத்தில் நானும், எதிரியும் பணத்தை முதலீடு செய்து அதை இரட்டிப்பாக பெறுவதை வழக்கமாக வைத்திருந்தோம் என்றால் சரியல்ல, அப்படி ஒரு நிறுவனம் இருப்பதே எனக்கு தெரியாது. அந்த நிறுவனத்தில் எனது மனைவி குழந்தையம்மாள் உறுப்பினராக இருந்தார் என்றால் சரியல்ல. Sky நிறுவனத்தில் முகவராக எதிரி செயல்பட்டார் என்றால் சரியல்ல. Sky

நிறுவனத்தில் எதிரி முகவராக இருந்த நிலையில் நான் மேற்படி நிறுவனத்தில் முதலீடு செய்ததால் அதற்கு பணப்பரிமாற்றம் செய்ய Security ஆக எதிரி எனக்கு 8 காசோலைகளை கொடுத்து வைத்திருந்தார் என்றால் சரியல்ல. அப்படி ஒரு நிறுவனமே எனக்கு தெரியாது.

10) எதிரி எனக்கு அனுப்பிய சட்ட பதில் அறிவிப்பில் எங்கள் இருவரிடைய கொடுக்கல் வாங்கல் இருந்து வந்த நிலையில் வங்கியில் மேற்படி Sky நிறுவனத்திற்காக பரிமாற்றம் செய்ய எதிரி என்னிடம் 8 காசோலைகளை கொடுத்து வைத்திருந்ததாக கூறியுள்ளார் என்றால் அவர் அப்படி தான் கூறியுள்ளார் அது பொய். 2019 ம் ஆண்டே எதிரியானவர் வீடு கட்டிவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி புதியதாக வீடு கட்ட என்னிடமிருந்து ரூபாய் 45 லட்சம் கடனாக பெற்றுக்கொண்டதாக நான் பிராது மனுவில் கூறியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள காசோலை Cross Cheque இல்லை என்றால் சரிதான். அந்த காசோலையில் 10.04.2024 தேதியுள்ளது என்றால் சரிதான். அந்த காசோலையில் 10 லட்சம் அல்லது அதற்கு குறைவாக தான் பரிமாற்றம் செய்ய முடியும் என்று உள்ளது என்றால் சரிதான்.

11) எதிரி எனக்கு Security ஆக கொடுத்திருந்த காசோலைகளில் ஒரு காசோலையில் நானே அதன் மதிப்பிற்கு அதிகமாக ரூபாய் 45 லட்சம் நிரப்பி நான் எதிரி மீது பொய்யாக வழக்கிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காசோலையில் எழுதப்பட்டுள்ள தொகை வங்கியின் சட்டதிட்டத்திற்கு முரணானது என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. காசோலையில் Multicity cheque என்று உள்ளது என்றால் சரிதான். எதிரி இராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று நல்ல வசதியில் உள்ள நிலையில் அவர் வீடுகட்டுவதற்காகவும், குடும்ப செலவிற்காகவும் என்னிடம் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல, அவர் கடன் வாங்கினார். எதிரி என்னிடம் கடன் வாங்கியது உண்மையாக இருந்திருந்தால் நான் அதற்கு முறையான காசோலையை பெற்றிருப்பேன் என்றாலும் எதிரியை பழிவாங்கவேண்டும் என்ற நோக்கில்

எனக்கு Security ஆக கொடுத்த காசோலைகளில் ஒன்றை வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் வளர்ச்சியில் பொறாமை கொண்டு சமூகத்தில் அவரது அந்தஸ்தை குறைக்கும் வகையில் நான் பொய் வழக்கிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் Security ஆக கொடுத்த 8 காசோலைகளில் ஒரு காசோலையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிலையில் மீதும் 7 காசோலைகள் என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல. அந்த 7 காசோலைகளை நான் கொடுக்க சட்டப்படி கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனக்கு சட்டப்படியாக கொடுக்கவேண்டிய கடன் தொகை எதுவும் இல்லை என்றாலும், அதனால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.